# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No. 25 /2020

2020-ம் ஆண்டு நவம்பர் மாதம் 04-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 4-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தர்மராஜ் | வயது | |
| தகப்பனார் பெயர் | பரமசிவம் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திருவாரூர் கோமல் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்துவருகிறேன். அ.சா.1 சுரேஷை தெரியும், ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 சுரேஷ், 1வது எதிரி சக்திவேல் திருவாரூர் துர்க்காலயா ரோட்டில் வைத்துள்ள இயற்கை அங்காடிக்கு பொருட்கள் வாங்கச் செல்லும்போது, 1வது எதிரி சக்திவேலுக்கும், அ.சா.1-க்கும் பழக்கம் ஏற்பட்டது. அந்த பழக்கத்தின் அடிப்படையில் 1 வது எதிரி சக்திவேல் அ.சா.1-னிடம் நீதிமன்றத்தில் காலி பணியிடங்கள் உள்ளது. திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம், சென்னை ஆகிய இடங்களில் உள்ள நீதிமன்றங்களில் உதவியாளர் பணிக்கு காலி பணியிடங்கள் உள்ளது என்று கூறியுள்ளார். அதற்காக ஒருவருக்கு ரூ.2,50,000/- தொகை என்றும், அதற்கு முன்பணமாக ரூ.1,00,000/- கொடுக்கவேண்டும் என்றும் 1வது எதிரி சக்திவேல், அ.சா.1-னிடம் கூறியுள்ளார். பிறகு அ.சா.1-க்கு தெரிந்த நபர்கள் இருந்தாலும் வேலை வாங்கி தருவதாக சொல்லியுள்ளார். இந்த விபரங்களை அ.சா.1 தனது தம்பிகளான அ.சா.2 தாசன் மற்றும் அ.சா.3 அழகர் ஆகியோர்களிடம் சொல்லியுள்ளார். நான் அ.சா.1 சுரேஷின் நண்பர் என்பதால் சுரேஷ் என்னிடமும் கூறினார். நான் ரூ-1,00,000/-ஐ எடுத்துக்கொண்டு அ.சா.1 சுரேஷின் வீட்டிற்கு 13.02.2018-ம் தேதியன்று நான், சக்திவேல், அ.சா.1 சுரேஷ், தினேஷ், அழகர், மற்றொரு சுரேஷ், தாசன் ஆகிய அனைவரும் அ.சா.1 சுரேஷ் வீட்டிலிருந்து கிளம்பி 1வது எதிரி சக்திவேல் வீட்டிற்கு

சென்றோம். 1வது எதிரி சக்திவேலை அவரது வீட்டில் சந்திந்தபோது, நீதிமன்ற பணிக்காக ஒரு ஆளுக்கு ரூ-2,50,000/- வேண்டும் என்றும், முன்பணமாக ரூ-1,00,000/- தரவேண்டும் என்றும் எங்களிடம் சொன்னார். 1வது எதிரி சக்திவேலிடம் அவர் சொன்னபடி ஆள் ஒன்றுக்கு தலா தொகை ரூ-1,00,000/- வீதம் ரூ-7,00,000/-ஐயும், எங்களது போட்டோ, பயோ டேட்டா, கல்வி சான்றிதழ் நகல்கள் ஆகியவற்றையும் 1வது எதிரி சக்திவேலிடம் கொடுத்தோம். நாங்கள் 1வது எதிரி சக்திவேலிடம் பணத்தை கொடுத்தபோது, அவரது அம்மா, அவரது மனைவி ஆகியோர் உடன் இருந்தார்கள். அப்போது 1வது எதிரி ஒரு மாதத்திற்குள் வேலை வந்துவிடும் என்றும், வேலைக்கான உத்தரவு வந்தவுடன் உங்களையெல்லாம் அழைத்து உத்தரவு நகலை கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னார். வேலைக்கான உத்தரவு வாங்கியபிறகு மீதமுள்ள ரூ-1,50,000/-ஐ கொடுத்துவிடவேண்டும் என்று 1வது எதிரி சக்திவேல் என்னிடம் கூறினார். அதன்பிறகு, ஒரு மாதம், இரண்டு மாதம் ஆகியது. ஆனால், 1வது எதிரி சக்திவேல் எங்களை கூப்பிடாததால் பணம் கொடுத்த நாங்கள் 7 பேரும் 1வது எதிரியை அவரது வீட்டிற்கு சென்று பார்த்தோம். அவரிடம் ஏன் நீங்கள் சொன்னபடி வேலை வாங்கி தரவில்லை என்று கேட்டோம். அதற்கு அவர் மே மாதம் லீவு வந்துவிட்டதாகவும், ஜுன், ஜுலையில் கண்டிப்பாக சொன்னபடி வேலை வாங்கி தந்துவிடுவதாகவும் கூறினார். பிறகு நாங்கள் அனைவரும் ஜுலை மாதம் 1வது எதிரியின் வீட்டிற்கு சென்று மீண்டும் கேட்டபோது, இந்த வருடம் 2018-ம் ஆண்டு கடைசிக்குள் வேலை வருவதற்கான வாய்ப்பு உள்ளது என்று சொன்னார். அதன் பிறகு 2019-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பொங்கல் முடிந்தபிறகு நாங்கள் மீண்டும் சென்று 1வது எதிரி சக்திவேலிடம் கேட்டபோது, திருவாரூர் நீதிமன்றத்தில் வேலை செய்யும் 2வது எதிரியான கோவிந்தலெட்சுமி என்பவரிடம் எங்களிடம் வாங்கிய பணத்தை கொடுத்துள்ளதாகவும், நீங்கள் வேண்டுமானால் அவரிடம் போன் செய்து தருகிறேன் பேசுங்கள் என்று சொல்லி போன் செய்து அ.சா.1 சுரேஷிடம் கொடுத்தார். அப்போது 2வது எதிரியான கோவிந்தலெட்சுமி அ.சா.1 சுரேஷிடம் நான் பணத்தை பெற்றுக்கொண்டுள்ளேன் என்றும், வாங்கிய பணத்தை கொடுக்கவேண்டியவர்களிடம் கொடுத்துவிட்டேன் என்றும், கண்டிப்பாக வேலை வந்துவிடும் என்றும் கூறினார். நாங்கள் நம்பிக்கையின் அடிப்படையில் 1வது எதிரியின் வீட்டிலிருந்து வந்துவிட்டோம். இந்த நிலையில், எங்களுடன் பணம் கொடுத்த சக்திவேல் என்பவருக்கு டி.என்.சி.எஸ்.சி-ல் வேலை கிடைத்துவிட்டது. அதனால், 1வது எதிரி சக்திவேல் எங்களது நண்பர் சக்திவேலிடம் பெற்ற

ரூ.1,00,000/-ஐ அவரிடம் கொடுத்துவிட்டார். ஆனால், எங்களிடம் பெற்ற தொகையை திருப்பி கொடுக்கவில்லை. வேலையும் வாங்கி தரவில்லை. அதனால், நாங்கள் 1வது எதிரி சக்திவேலிடம் கொடுத்த பணத்திற்கு அத்தாட்சியாக அவரிடம் பத்திரம் எழுதிக்கொடுக்கும்படி கேட்டோம். அதற்கு பத்திரம் எழுதி கொடுத்தார். அதில் எதிரிகள் இருவரும் கையொப்பம் செய்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் 04.02.2019-ம் தேதிய பத்திரம் எதிரிகள் இருவராலும் எங்களுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டதுதான். ஆனால், அதன்பிறகும் வேலையோ, பணமோ எங்களுக்கு கொடுக்கவில்லை. அதன்பிறகு, மீண்டும் ஒருமாதம் கழித்து 1வது எதிரி சக்திவேலிடம் நாங்கள் மீண்டும் சென்று கேட்டோம். அதன்பிறகு 1 மாதம் கழித்து வேலை சம்மந்தமாக 1வது எதிரி சக்திவேலிடம் நாங்கள் சென்று கேட்டபோது, அவர் மீண்டும் எங்களிடம் உங்கள் அனைவருக்கும் தனித்தனியாக வேண்டுமானால் பணம் எங்களிடம் வாங்கியதற்காக பத்திரம் எழுதி தருவதாக கூறினார். அதேபோல், அ.சா.1 சுரேஷ், அ.சா.2 தாசன், அ.சா.3 அழகர், தினேஷ் மற்றும் எனக்கும் தனித்தனியே ரூ-1,00,000/- பெற்றதற்கான பத்திரத்தை எழுதிக்கொடுத்தார். அதில் 1வது எதிரி சொன்னபடி வேலை வாங்கி தருவதாகவும், இல்லையென்றால் பெற்ற தொகைக்கு 2 சதவீதம் வட்டி சேர்த்து தருவதாக கூறி எழுதிக்கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் 01.03.2019-ம் தேதிய பத்திரம் 1வது எதிரியால் எழுதிக்கொடுக்கப்பட்டதுதான். அதில் 1வது எதிரி சக்திவேல் கையொப்பம் செய்து கொடுத்தார். சாட்சிகளாக சுரேஷ் மற்றும் சக்திவேல் ஆகியோர் கையொப்பம் செய்தார்கள். மேற்படி ஆவணம் **அ.த.சா.ஆ.5** ஆகும். அதன்பிறகு கொஞ்ச நாட்கள் கழித்து 1வது எதிரி சக்திவேலை சந்தித்து வேலை சம்மந்தமாக கேட்டபோது, அவர் 2 வது எதிரியான கோவிந்தலெட்சுமியிடம் பணத்தை கொடுத்துவிட்டதாகவும், அவர் வேலை செய்யும் இடத்திற்கு சென்று கேட்கலாம் என்றும் சொன்னார். அதன்பேரில், நானும், அ.சா.2 தாசனும் திருவாரூர் மாவட்ட நீதிமன்றத்திற்கு வந்தோம். அப்போது 1வது எதிரி சக்திவேல் எங்களை வெளியில் இருக்கசொல்லிவிட்டு, 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை பார்த்து கேட்டுவிட்டு வருவதாக சொல்லி சென்றார். அதன்பிறகு, நீண்ட நேரம் ஆகியும் 1வது எதிரி சக்திவேல் எங்களிடம் வந்து பதில் சொல்லவில்லை என்பதால் நாங்கள் மாலை சுமார் 3.00 மணி வரையில் மாவட்ட நீதிமன்றத்தில் காத்திருந்துவிட்டு, வீட்டிற்கு சென்றுவிட்டோம். அதன்பிறகுதான், எங்களை போல் இன்னும் பல பேரிடம் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக கூறி, 1வது எதிரி சக்திவேல் ரூ.83,00,000/-வரை பெற்று, ஏமாற்றியுள்ளதாக

கேள்விபட்டேன். அதன்பிறகு, 1வது எதிரி சக்திவேல், 2வது எதிரியான கோவிந்தலெட்சுமியிடம் பணம் கொடுத்து ஏமார்ந்துவிட்டதாகவும், அதனால் புகார் கொடுப்பதாகவும் எங்களிடம் கூறி, திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு புகார் கொடுக்க எங்களை அழைத்துச்சென்றார். அதன்பிறகு நாங்கள் 7 பேரும் பணம் சம்மந்தமாகவும், வேலை வாங்கிதருவதாக ஏமாற்றியது சம்மந்தமாகவும் 1வது எதிரி சக்திவேல் மீது புகார் கொடுத்தோம். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் ஐ.டி.ஐ படித்துள்ளேன். ஐ.டி.ஐ படித்தால் என்ன வேலை கிடைக்கும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் எதற்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். பணம் சம்மந்தமாக நான் தனிப்பட்ட புகார் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன். நான் சுரேஷ் கொடுத்த புகார் சம்மந்தமாக சாட்சி சொல்ல வந்துள்ளேனா நான் கொடுத்த புகாருக்கு சாட்சி சொல்ல வந்துள்ளேனா என்றால் சுரேஷ் கொடுத்த புகாரும், நான் கொடுத்த புகாரும் ஒன்று தான். புகார் எந்த தேதியில் கொடுக்கப்பட்டது என்றால் தேதி மறதியாக உள்ளது. புகார் கொடுத்தபோது என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் 7 பேரும் இருந்தார்கள். 1வது எதிரி சக்திவேலை எனக்கு ஏற்கனவே தெரியுமா என்றால் நான் பணம் கொடுத்தபோதுதான் முதலில் அவரை பார்த்தேன். 1வது எதிரி சக்திவேல் என்னிடம் நேரடியாக பணம் வேண்டுமென்று சொன்னாரா என்றால் அவரை வீட்டில் சென்று சந்தித்தபோது சொன்னார். பணம் கொடுத்தபோதுதான் 1வது எதிரி சக்திவேல் நேரடியாக என்னிடம் பணம் கேட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 சுரேஷ் எந்த தேதியில் என்னிடம் 1வது எதிரி சக்திவேல் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக என்னிடம் சொன்னார் என்றால் பணம் கொடுத்ததற்கு 3 நாட்கள் முன்பாக சொன்னார். தேதி மறதியாக உள்ளது. 1வது எதிரி என்ன சொன்னார் என்றால் திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம், சென்னை ஆகிய இடங்களில் நீதிமன்றத்தில் காலி பணியிடங்கள் உள்ளது என்றும், அந்த வேலைக்கு ஒரு ஆளுக்கு ரூ-2,50,000/- பணம் வேண்டும் என்றும், முன்பணமாக ரூ.1,00,000/- கொடுக்கவேண்டும் என்றும், சொன்னார். நீதிமன்றத்தில் காலி பணியிடங்கள் உள்ளது என்பதற்கு உத்தரவு, தினசரி நாளிதழ் எதையாவது பார்த்தீரா என்றால்

இல்லை. உத்தரவு , நாளிதழ் எதுவும் இல்லாமல் பணம் கொடுப்பது தவறு என்று எனக்கு தெரியாதா என்றால் அப்போது எனக்கு தெரியவில்லை. இப்போதுதான் தெரிகிறது. எந்த தேதியில் 1வது எதிரியிடம் பணம் கொடுத்தேன் என்றால் 13.02.2018-ம் தேதி கொடுத்தேன். அப்போது 1வது எதிரி சக்திவேலை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். பணம் கொடுத்த அன்று 1வது எதிரியிடமிருந்து ஆவணம் எதாவது எழுதி வாங்கிக்கொண்டேனா என்றால் இல்லை. எதற்காக பணம் கொடுத்தேன் என்பதற்கு எதாவது எழுதி வாங்கிக்கொண்டேனா என்றால் இல்லை. நாங்கள் 7 பேரும் பணம் கொடுத்ததற்கு 1வது எதிரி சக்திவேலுக்கு ஏதாவது எழுதிக்கொடுத்தோமா என்றால் எங்களது பயோ டேட்டா, போட்டோ, கல்விச் சான்றிழ் நகல்கள் ஆகியவற்றை கொடுத்தோம். இந்த விபரத்தை போலீசார் விசாரித்தபோது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் போலீசார் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பணம் கொடுத்தபோது 1வது எதிரி சக்திவேல் நீதிமன்றத்தில் வேலை செய்வதாக சொன்னாரா என்றால் இல்லை. அதன்பிறகு, 1 மாதம் கழித்து வேலை வாங்கி தருவதாக 1வது எதிரி ஏதாவது எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை. அதன்பிறகு எப்போது நான் சென்று 1வது எதிரியை பார்த்தேன் என்றால் தேதி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. அதன்பிறகு 1வது எதிரியிடம் ஏன் வேலை வாங்கி தரவில்லை என்று நாங்கள் கேட்டோமா என்றால் கேட்டோம். அவர் மே மாதம் நீதிமன்றத்திற்கு லீவு வந்துவிட்டதாகவும், ஜூன், ஜூலையில் வாங்கி தருவதாகவும் சொன்னார். சாதாரணமாக இயற்கை அங்காடி நடத்திவரும் 1வது எதிரி நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவார் என்று எப்படி நம்பினீர்கள் என்றால் 1வது எதிரி எங்களிடம் கண்டிப்பாக வேலை வாங்கி தருவதாகவும், நம்பும்படியும் சொன்னதால் நாங்கள் நம்பினோம். ஜூலை மாதத்தில் நாங்கள் 1வது எதிரியை பார்த்தபோது, அவர் என்ன சொன்னார் என்றால் இந்த வருடம் இறுதிக்குள் வேலை வந்துவிடும் என்று சொன்னார். அதன்பிறகு நாங்கள் எப்போது சென்று 1வது எதிரியை பார்த்தோம் என்றால் 2019-ம் வருடம் பொங்கல் முடிந்து சென்றுபார்த்தோம். அப்போது அவர் என்ன சொன்னார் என்றால் அப்போதும் அவர் கண்டிப்பாக வேலை வாங்கி தருவதாக சொன்னார். நாங்கள் கொடுத்த பணத்திற்கு பத்திரம் எழுதிக் கேட்டோம். நாங்கள் கொடுத்த பணத்தை அவரே வைத்திருப்பதாக சொன்னாரா, அல்லது வேறு யாரிடமாவது குறிப்பிட்டு சொன்னாரா என்றால் 2வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்திருப்பதாக சொன்னார். கோவிந்தலெட்சுமி யார்

என்று நாங்கள் 1வது எதிரியிடம் விசாரித்து தெரிந்துக்கொண்டோமா என்றால் தெரிந்துகொண்டோம். அவர் திருவாரூர் நீதிமன்றத்தில் வேலை செய்வதாக சொன்னார். 2வது எதிரி கோவிந்தலெட்சுமி எங்கு குடியிருப்பதாக 1வது எதிரி சொன்னார் என்றால் 1வது எதிரிக்கு சொந்தமான காம்பிளக்ஸில் குடியிருப்பதாக சொன்னார். 1வது எதிரியின் வீட்டில் 2வது எதிரி வசித்து வருகிறார் என்பதை நான் நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். 2வது எதிரி அடிக்கடி 1வது எதிரியின் வீட்டிற்கு சென்றுவருவார். 2வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் சென்று நாங்கள் நேரடியாக பணத்தை பற்றிய விபரத்தை கேட்டு தெரிந்துக்கொண்டோமா என்றால், தெரிந்துக்கொண்டோம். 1வது எதிரி, 2வது எதிரிக்கு போன் போட்டு, என்னிடம் பேசச்சொன்னாரா அல்லது அ.சா.1 சுரேஷிடம் பேசச்சொன்னாரா என்றால் அ.சா.1 னிடம் கொடுத்து பேசச்சொன்னார். அப்போது நாங்கள் அனைவரும் உடன் இருந்தோம். அப்போது 2வது எதிரி கோவிந்தலெட்சுமி என்ன சொன்னார் என்றால் பணத்தை நான் பெற்றுக்கொண்டுவிட்டேன். அதை யாரிடம் கொடுக்கவேண்டுமோ அவரிடம் கொடுத்துவிட்டேன் என்று சொன்னார். யாரிடம் கொடுத்தார் என்ற விபரத்தை சொன்னாரா என்றால் இல்லை. நான் கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்திற்கு நேரடியாக வந்தேனா என்றால் வந்தேன். தேதி தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நேரம் தெரியுமா என்றால் காலையில் சுமார் 11.00 மணியளவில் வந்தேன். நான் மட்டும் வந்தேனா என்றால் நானும், தாசனும் வந்தோம். எங்கள் இருவரையும் யார் அழைத்துவந்தது என்றால் 1வது எதிரி சக்திவேல்தான் அழைத்துவந்தார். கிழமை தெரியுமா என்றால் தெரியவில்லை. கோர்ட் நடந்துக்கொண்டிருந்தது. நான் நீதிமன்றத்திற்கு வந்தபிறகு என்ன செய்தேன் என்றால் எங்களை 1வது எதிரி வெளியில் இருக்கசொல்லிவிட்டு, 2வது எதிரி கோவிந்தலெட்சுமியை பார்த்து கேட்டுவிட்டு வருவதாக சொல்லி, நீதிமன்றத்திற்குள் வந்துவிட்டார். நான் நீதிமன்றத்திற்கு வந்த அன்று 2வது எதிரியை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நாங்கள் 2வது எதிரியிடம் நேரடியாக எதுவும் கேட்கவில்லை என்றால் போனில் பேசியதுதான். நீதிமன்றத்திலிருந்து வெளியில் வந்து, 1வது எதிரி சக்திவேல் எங்களிடம் எதுவும் சொன்னாரா என்றால் அவர் வரவில்லை. நாங்கள் வெயிட் பண்ணி பார்த்துவிட்டு வீட்டிற்கு போய்விட்டோம். 04.02.2019-ம் தேதி என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.3 ஆவணத்தில் 1 மற்றும் 2வது எதிரிகள் இருவரும் கையெழுத்து செய்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 04.02.2019-ம்

தேதியன்று நாங்கள் அனைவரும் 1வது எதிரியின் வீட்டிற்கு சென்றோமா என்றால் சென்றோம். எங்கள் முன்னிலையில்தான் எதிரிகள் இருவரும் கையெழுத்து செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். அ.த.சா.ஆ.3-ஐ யார் எழுதியது என்றால் சக்திவேல்தான் எழுதிக்கொடுத்தார். பத்திரம் யார் வாங்கிவந்தது என்றால் நாங்கள்தான் வாங்கி சென்றோம். அ.த.சா.ஆ.3-ல் என்ன எழுதப்பட்டது என்றால் வேலை வாங்கி கொடுக்கவில்லை என்றால் பணத்தை திருப்பி தருவதாக எழுதப்பட்டது. அ.த.சா.ஆ.3 பத்திரம் எழுதப்பட்டபோது, யார் யார் இருந்தார்கள் என்றால் நாங்கள் 7 பேர் மற்றும் 1வது எதிரி சக்திவேல் மற்றும் 2வது எதிரி கோவிந்தலெட்சுமி ஆகியோர் இருந்தோம். சாட்சியாக யார் கையெழுத்து போட்டார்கள் என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. அ.த.சா.ஆ.5-ல் 1வது எதிரி சக்திவேல் மட்டும் கையெழுத்து செய்தாரா அல்லது 2வது எதிரி கோவிந்தலெட்சுமியும் கையெழுத்து செய்தாரா என்றால் 1வது எதிரி சக்திவேல் மட்டும்தான் கையெழுத்து செய்து கொடுத்தார். 1வது எதிரி, 2வது எதிரி மீது திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எங்களை போல் 1வது எதிரியும் ஏமார்ந்துவிட்டதாக என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு புகார் கொடுக்க முதலில் சென்றோமா அல்லது விசாரணைக்கு சென்றோமா என்றால் முதலில் புகார் கொடுக்க சென்றோம். பிறகு விசாரணைக்கு கூப்பிட்டார்கள். எந்த தேதியில் விசாரணைக்கு சென்றோம் என்றால் தேதி ஞாபகம் இல்லை. எங்களை விசாரணை செய்தபோது, 1வது எதிரி, 2வது எதிரி மீது புகார் கொடுத்த விபரத்தை தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். 1வது எதிரி, 2வது எதிரி மீது கொடுத்த புகாரின் அடிப்படையில், மற்ற நபர்களை விசாரித்தார்களா என்றால் எங்களை விசாரித்தபோது, எங்களைபோல் பணம் கொடுத்த மற்றவர்களையும் விசாரிக்கவேண்டும் என்று சொன்னார்கள். 1வது எதிரி, 2வது எதிரியிடம் பணம் கொடுத்து ஏமார்ந்துவிட்டார் என்ற விபரத்தை தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். எங்களோடு பணம் கொடுத்த எங்களது நண்பர் சக்திவேல் என்பவருக்கு டி.என்.சி.எஸ்.சி-ல் வேலை கிடைத்தபிறகு, அவர் 1வது எதிரியிடம் கொடுத்திருந்த பணத்தை யார் திருப்பி கொடுத்தது என்றால் மேற்படி சக்திவேலுக்கு 1வது எதிரி சக்திவேல்தான் ரூ.1,00,000/. பணத்தை திருப்பி கொடுத்தார். அந்த பணத்தை என் நண்பர் சக்திவேல், 1வது எதிரியிடமிருந்து வாங்கியபோது, நான்

இருந்தேனா என்றால் அ.சா.1 சுரேஷ், அ.சா.2 தாசன், மற்றும் சக்திவேல் ஆகியோர் சென்று வாங்கிவந்தார்கள். 2 வது எதிரிதான் சக்திவேலுக்கு பணம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் அந்த இடத்தில் இல்லாததால் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் 1 மற்றும் 2 வது எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றுதான் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். 2 வது எதிரி நீதிமன்றத்தில் பணிசெய்து வருவதால் அவரை வழக்கிலிருந்து, தப்பிக்க வைக்கவேண்டும் என்பதற்காக 1 வது எதிரியை இணைத்து புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. அ.சா.1-க்கு அனுசரணையாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரிக்கு வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

நாங்கள் பணம் கொடுத்தது 1 வது எதிரியிடம்தான் என்றால் சரிதான். 1 வது எதிரி 2 வது எதிரியிடம் பணம் கொடுத்ததாக 1 வது எதிரி கூறும் விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 சுரேஷிடம் போனில் பேசியது 2 வது எதிரி கோவிந்தலெட்சுமிதான் என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் போனில் கோவிந்தலெட்சுமி என்று பேசியவர் பெயரை சொன்னார். அ.சா.1-னிடம் போனில் பேசியவர் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி இல்லை என்றால் சரியல்ல. போனில் பேசியபோது, தான் 1 வது எதிரியிடம் வாங்கிய பணத்தை கொடுக்க வேண்டியவர்களிடம் கொடுத்துவிட்டேன் என்று எந்த வார்த்தையும் 2 வது எதிரி பேசவில்லை என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.3-ல் உள்ள கையெழுத்து 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியின் கையெழுத்து அல்ல என்றால் சரியல்ல. என் முன்னிலையில் 2 வது எதிரி எந்த கையெழுத்தும் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ.3 புகாருக்கு பின் புகாருக்கு ஏற்ப தாசனால் எழுதி கோவிந்தலெட்சுமியின் கையெழுத்து மோசடியாக இட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1 வது எதிரியின் குடும்பத்திற்கும், 2 வது எதிரியின் குடும்பத்திற்கும் இருந்த கொடுக்கல்வாங்கல் பிரச்சனையின் வன்மத்தில் 1 வது எதிரி, 2 வது எதிரியின் பெயரை என்னிடம் தவறாக பயன்படுத்தியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2 வது எதிரி அரசு ஊழியர் என்பதால் அவர் பெயரை பயன்படுத்தி, அதிகப்படியாக சாட்சியமளித்தால், 2 வது எதிரியிடமிருந்து பணத்தை பெற்று தந்துவிடுகிறேன் என்று 1 வது எதிரி என்னிடம் வாக்குறுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதனால்தான் 2 வது எதிரி கோர்ட்டில் வேலை செய்வதை

தெரிந்துக்கொண்டோம், 2வது எதிரி 1வது எதிரியின் வீட்டிற்கு அடிக்கடி வந்து செல்வார் என்றும், 2வது எதிரி, 1வது எதிரியின் வீட்டில் குடியிருந்தார் என்றும், 04.03.2019-ம் தேதியன்று 1வது எதிரி, 2 வது எதிரியின் மீது புகார் கொடுத்த விபரத்தை தெரிந்து கொண்டதாகவும், 1வது எதிரி, 2வது எதிரியிடம் ஏமார்ந்துவிட்டதாக தெரிந்துக்கொண்டதாகவும் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்ததாகவும், முன்னுக்குபின் முரணாக அதிகப்படுத்தி, 1வது எதிரி கேட்டுக்கொண்டதால் 2வது எதிரியை சிக்கவைக்கவேண்டும் என்று 1வது எதிரிக்கு சாதகமாக குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. 1வது எதிரியின் வீட்டில் 2வது எதிரி எந்த காலத்திலும், குடியிருக்கவில்லை என்றாலும், 1வது எதிரியின் வீட்டிற்கு வந்து செல்லவில்லை என்றாலும், 04.03.2019-ம் தேதியன்று 1வது எதிரி, 2வது எதிரியின் பேரில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No. 25 /2020**

2020-ம் ஆண்டு நவம்பர் மாதம் 04-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 5 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | வயது | |
| தகப்பனார் பெயர் | ரவிச்சந்திரன் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திருவாரூர் மாவட்டம் நாராணமங்கலத்தில் வசித்து சென்னையில் தனியார் நிறுவனத்தில் ஏ.சி மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.4 வரையானவர்களை தெரியும். ஆஜர் 1வது எதிரி சக்திவேல் மற்றும் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியும். அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் என் நண்பர்கள். அ.சா.1 சுரேஷ் அவர்களின் அண்ணன். அ.சா.1 சுரேஷ் மூலமாகதான் எதிரிகளை தெரியும். எதிரி சக்திவேல், அ.சா.1 சுரேஷிடம் திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம், சென்னை ஆகிய இடங்களில் நீதிமன்றத்தில் வேலை காலியாக உள்ளதாகவும், அதில் வேலை வாங்கி தருவதாக சொன்னதாகவும், அ.சா.1 சுரேஷ் என்னிடம் சொன்னார். அதற்கு நான் சம்மதப்பட்டேன். அதற்கான தொகை ரூ.1,00,000/-த்தை முன்பணமாக கேட்டார்கள். அதனால், நானும் என்னுடன் சுரேஷ், அழகர், தாசன், தினேஷ், தர்மராஜ், சக்திவேல் ஆகியோர் 1வது எதிரியின் வீட்டிற்கு சென்று 13.02.2018-ம் தேதியன்று மொத்தமாக ரூ-7,00,000/-த்தையும், எங்களது பயோடேட்டா, ஆதார் கார்டு, டீ.சி மற்றும் மார்க் ஷீட் ஜெராக்ஸ் ஆகியவைகளை எதிரி சக்திவேலிடம் கொடுத்தோம். அதன்பிறகு எங்களுக்கு சொன்னபடி வேலை கிடைக்கவில்லை என்பதால் எதிரி சக்திவேலிடம் சுமார் 10 முறை போனில் பேசினேன். அப்போதெல்லாம் எதிரி சக்திவேல் எங்களிடம் எங்கள் வேலை விஷயமாக ஹைக்கோர்ட் சென்றுள்ளதாகவும் கூறுவார். அவ்வாறு அவர்

கூறும்போது, நான் சென்னையில்தான் இருக்கிறேன், நானும் வருகிறேன் என்று சொல்வேன் அதன்பிறகு அவர் போனை எடுக்கமாட்டார். அதன்பிறகு நான் மறுபடியும் அவருக்கு போன் செய்தபோது, ஒரு பெண் அந்த போனை எடுத்து பேசினார். தான் ஹைக்கோர்ட் வாட்ச் மேன் என்றும், சார் வேலை விஷயமாக இருக்கிறார் என்று சொன்னார். அதன்பிறகு, 1 மணி நேரம் கழித்து எதிரி சக்திவேல் எனக்கு போன் செய்தார். என்னிடம் கோபமாக பேசினார். எதற்கு அடிக்கடி மேடத்திடம் போன் செய்து, பேசுகிறீர்கள் என்று என்னிடம் சத்தம் போட்டார். அதன்பிறகு 2019-ம் வருடத்தில் ஏப்ரல், மே மாதத்தில் கோர்ட் லீவு என்றும், அதன்பிறகுதான் வேலைக்கான உத்தரவாதம் தரமுடியும் என்றும் எதிரி சக்திவேல் கூறினார். அதன்பிறகு 2019-ம் வருடத்தில் அழகர், தாசன், சுரேஷ், தர்மராஜ், தினேஷ் ஆகியோர் எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்று, அவரிடம் வேலை பற்றி கேட்டுள்ளார்கள். அப்போது எதிரி சக்திவேல் எங்களிடம் வாங்கிய பணத்தை எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்துவிட்டதாகவும் சொன்னார். எதிரிகளிடம் பேசிய பிறகு ஒரு நாள் எதிரி சக்திவேல் தாசன், தர்மராஜ் ஆகியோரை அழைத்துக்கொண்டு திருவாரூர் நீதிமன்றத்திற்கு எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்த பணத்தை வாங்குவதற்காக வந்துள்ளார்கள். ஆனால், எதிரி கோவிந்தலெட்சுமியை பார்க்க முடியவில்லை. அதன்பிறகு தாசனும், தர்மராஜும் நீதிமன்றத்திலிருந்து போனபிறகு, எதிரி கோவிந்தலெட்சுமி அவரது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்திக்கொள்ள முயற்சி செய்ததாக நான் கேள்விப்பட்டேன். ஆனால், எனக்கு எதிரி சக்திவேல் சொன்னபடி வேலை எதுவும் கிடைக்கவில்லை. அதன்பிறகு, நாங்கள் திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**கு.வி. (1 வது எதிரி தரப்பில்)**

நான் என்ன படித்துள்ளேனா என்றால் 12 ம் வகுப்பு முடித்துவிட்டு ஐ.டி.ஐ படித்துள்ளேன். அ.சா.1 சுரேஷை எனக்கு எப்படி தெரியும் என்றால் என் நண்பர்களான தாசன் மற்றும் அழகரின் அண்ணன் ஆவார். அதனால் அவரை எனக்கு நன்றாக தெரியும். நீதிமன்றத்தில் காலி பணியிடங்கள் உள்ளதாக என்னிடம் யார் சொன்னது என்றால் சுரேஷ் சொன்னார். எதிரி சக்திவேல் அவரிடம் சொன்னதாக சொன்னார். முதலில் எதிரி சக்திவேல் என்னிடம் நேரடியாக

பேசவில்லை என்றால் சரிதான். என்ன வேலை வாங்கி தருவதாக சொன்னார் என்றால் உதவியாளர் வேலை வாங்கிதருவதாக சொன்னார். அரசு வேலை என்பதால் போட்டிகள் இருக்கும் என்றால் சரிதான். அதற்கு விண்ணப்பம் கொடுக்கவேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். வேலைவாய்ப்பு அலுவலக பதிவினை புதுப்பித்து வைத்திருந்தேனா என்றால் வைத்திருந்தேன். 13.02.2018-ம் வருடம் நான் எதிரி சக்திவேலை சென்று பார்த்தேன் என்றால் சரிதான். எதிரி சக்திவேலிடம் பணம் கொடுத்தபோது, அதற்கு அத்தாட்சி எதாவது எழுதி வாங்கினீர்களா என்றால் அப்போது எனக்கு மட்டும் வாங்கவில்லை. மற்றவர்களுக்கு எழுதி வாங்கினார்கள். பிறகு எல்லோருக்கும் சேர்த்து பத்திரம் எழுதியபோது, எனக்கும் எழுதப்பட்டது. எதிரி சக்திவேலிடம் பணம் கொடுத்த அன்று வேறு என்னென்ன கொடுத்தேன் என்றால் என் பயோடேட்டா, கல்விச் சான்று நகல்கள், ஆதார் கார்டு நகல் ஆகியவற்றை கொடுத்தேன். எதிரி சக்திவேலிடம் பணம் கொடுத்தபோது, யார் யார் இருந்தார்கள் என்றால் அழகர், சுரேஷ், தாசன், தர்மராஜ், தினேஷ், நான் ஆகிய 7 பேர் இருந்தோம் மற்றும் எதிரி சக்திவேலின் அம்மா, அவரது மனைவி, குழந்தைகள் ஆகியோர் இருந்தார்கள். அதன்பிறகு எதிரி சக்திவேலை எப்போது பார்த்தோம் என்றால் நேரடியாக நான் பார்க்கவில்லை. போன் மூலமாக பேசிக்கொண்டிருந்தேன். நான் எதிரி சக்திவேலிடம் போனில் பேசியபோது, எந்த தேதியில் அவர் ஹைக்கோர்ட்டில் இருப்பதாக சொன்னார் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. அ.சா.1 புகார் கொடுத்த பிறகு எதிரி சக்திவேல் போனில் ஹைக்கோர்ட்டில் இருப்பதாக சொன்னாரா, அதற்கு முன்பாகவா என்றால் புகார் கொடுப்பதற்கு முன்பாக கூறினார். எதிரி சக்திவேல், எதிரி கோவிந்தலெட்சுமியின் மீது ஹைக்கோர்ட்டில் புகார் கொடுத்திருப்பதாக என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் சரிதான். எதிரி சக்திவேல் தானும் ஏமார்ந்துவிட்டேன் என்று என்னிடம் சொன்னாரா என்றால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. அ.சா.1 சுரேஷ் எஸ்.பி ஆபிசில் புகார் கொடுத்தாரா என்றால் புகார் கொடுத்தார். தேதி ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரித்தார்கள். எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 2 முறை விசாரித்தார்கள். 03.04.2019 அன்று பணத்தை திருப்பி தருவதாக எதிரி சக்திவேல் கூறினார். ஆனால், பணம் கொடுக்கவில்லை. அதனால் நாங்கள் புகார் கொடுத்தோம். எதிரி சக்திவேல் எங்களிடம் அவர் வாங்கிய பணம் மொத்தத்தையும், எதிரி கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்துவிட்டதாகவும், அவரிடம் கேட்டு வாங்கிக்கொள்ளுங்கள் என்றும்

சொன்னார். அ.சா.1-னிடம் எதிரி கோவிந்தலெட்சுமி போனில் பேசியபோது, என்ன விபரம் சொன்னார் என்றால் நாங்கள் எதிரி சக்திவேலிடம் கொடுத்த பணம் முழுவதையும் எதிரி கோவிந்தலெட்சுமி பெற்றுக்கொண்டதாகவும், அதனால் பணம் அவரிடம்தான் உள்ளதாகவும், சொன்னார். மேலும் அனைவருக்கும் 28.02.2019-ம் தேதிக்குள் வேலைக்கான உத்தரவு வந்துவிடும் என்றும், 04.03.2019-ம் தேதிக்குள் பணம் வரவில்லை என்றால் நானே பணத்தை திருப்பி கொடுத்துவிடுகிறேன் என்றும், அ.சா.1 சுரேஷிடம் சொன்னார். அதன்பிறகு பணம் வரவில்லை என்பதால்தான் பணத்திற்காக அனைவருக்கும் சேர்த்து பத்திரம் எழுதி வாங்கப்பட்டது என்றால் சரிதான். எங்களுக்கு முன்பாகவே 1வது எதிரி சக்திவேல் போலிசில் புகார் கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2 வது எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்றவேண்டும் என்ற எண்ணத்தில், அவரை பற்றிய ஒரு விபரமும் தெரிவிக்காமல் 1வது எதிரியை மட்டுமே குறிப்பிட்டு, சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்களை போலீசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். 1வது எதிரிக்கு வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்கு அனுசரணையாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. ( 2 வது எதிரி தரப்பில் )**

நீதிமன்றத்திற்கு தாசன், தர்மராஜ் ஆகியோர் எதிரி சக்திவேலுடன் வந்த விபரத்தையும், 2 வது எதிரியை பார்க்கமுடியவில்லை என்ற விபரத்தையும், போலீசார் விசாரித்தபோது சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாசனும், தர்மராஜும் நீதிமன்றத்திலிருந்து சென்றவுடன் 2 வது எதிரி அவரது உடலில் மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு கொளுத்திக்கொள்ள முயற்சி செய்தார் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்கண்ட இரண்டு விபரங்களையும் வழக்கின் முன்னேற்றத்திற்காக 2 வது எதிரியை சம்மந்தப்படுத்தவேண்டும் என்ற நோக்கோடு மிகைப்படுத்தி சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரியை தெரியும் என்று தற்போது போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் பணத்தை கொடுத்தது 1வது எதிரி சக்திவேலிடம் என்றால் சரிதான். ஆனால், 2 வது எதிரி எங்களிடம் போனில் பேசினார். 2 வது எதிரி என்னிடம் போனில் நேரடியாக பேசினாரா என்றால் பேசினார். இந்த விபரத்தை போலீசார்

விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்றாலும், தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1வது எதிரி சக்திவேல், 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் பணம் கொடுத்தாரா என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.1-னிடம் 2 வது எதிரி போனில் பேசிய விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. கான்பிரன்ஸ்காலில் நான் கேட்டேன். கான்பிரன்ஸ்காலில் கேட்டதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரியின் குடும்பத்திற்கும், 2 வது எதிரியின் குடும்பத்திற்கும் கொடுக்கல்வாங்கல் சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டு, வன்மத்தில் இருந்துவந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனால் 1வது எதிரி அவரை காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்றும், 2 வது எதிரியை சிக்கவைக்கவேண்டும் என்றும், 2 வது எதிரியை சம்மந்தபடுத்தி எங்களிடம் தவறாக சொல்லியுள்ளார் என்றாலும், அதனடிப்படையில் நான் 2 வது எதிரியை சம்மந்தப்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரி அரசு ஊழியர் என்பதால் 1வது எதிரி கூறியபடி 2 வது எதிரியை சம்மந்தப்படுத்தி பொய் சாட்சியம் அளித்தால், 1வது எதிரியிடம் கொடுத்த பணம் திரும்ப கிடைத்துவிடும் என்ற 1வது எதிரியின் தூண்டுதலின் பேரில் 2 வது எதிரியை சம்மந்தப்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.